செ.வெ.எண272/2009/செமதொஅ நாள்: 02.09.2009

**<u>காஞ்சிபுரம் தமிழ்நாடு ஜரிகை ஆலையின் உற்பத்தியினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்.</u>**

காஞ்சிபுரம் ஓரிக்கையில் தமிழ்நாடு ஜரிகை தொழிற்சாலை இயங்கி வருகிறது. ஜரிகை தொழிற்சாலையினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.பெ.விஸ்வநாதன், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.சுந்தர், முதன்மை செயலர் திரு.இராஜகோபால், இணை இயக்குநர் திரு.யுஜீன், கைத்தறி மற்றும் துணிநூல்துறை துணை இயக்குநர் திரு.பழனிச்சாமி, ஓரிக்கை தமிழ்நாடு ஜரிகை தொழிற்சாலை நிர்வாக இயக்குநர் திரு.தமிழரசி, மாநில கைத்தறி ஆலோனைக்குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ.பொன்மொழி, மாவட்ட ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.சி.வி.எம்.அ. சேகர், திரு.சன்பிராண்ட் ஆறுமுகம், மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

ஜரிகைத் தொழிற்சாலையினை பார்வையிட்டு செய்தியாளர்களிடம் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அவர்கள் பேசியதாவது, பாரம்பரிய பட்டு என்றால் காஞ்சிபுரம் பட்டுபுடவை என்கிற பெயர் பெற்ற காஞ்சிபுரத்தில் பட்டு கூட்டுறவு சங்கங்களில் பட்டு சேலைகளின் உற்பத்தியினை தொடர்ந்து அதிகரிக்கவும், தரமான புதிய நவீன டிசைன்கள் புகுத்தவும் இந்த ஜரிகை ஆலையினை இன்று ஆய்வு செய்தோம். புதிய ரகங்களை வடிவமைப்பது குறித்து நெசவாளர்களுக்கு தகுந்த ஆலோனைகளை வழங்க அதிகாரிகளுக்கு உத்தரவு இடப்பட்டுள்ளது. நெசவாளர் சங்கங்களில் கொள்முதல் செய்ய வேண்டிய பட்டுச் சேலைகளை கொள்முதல் செய்யும்படி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் ஜரிகை தொழிற்சாலையில் தற்போது 4 ஆயிரம் மார்க் ஜரிகை உற்பத்தி செய்யப்படுகிறது. 6 ஆயிரம் மார்க் ஜரிகை உற்பத்தி செய்ய தேவையான வசதி உள்ளது. அதனை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் 12 ஆயிரம் மார்க் ஜரிகை தேவைப்படுகிறது. மாதந்தோறும் டெண்டர் மூலம் சூரத்திலிருந்து 7 ஆயிரத்து 500 மார்க் ஜரிகை செய்யப்படுகிறது. இந்த நிலையினை மாற்றி காஞ்சிபுரம் ஜரிகை தொழிற்சாலை மூலம் 6 ஆயிரம் ஜரிகை மார்க் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். மேலும், ஜரிகை தொழிற்சாலையினை விரிவுபடுத்தி அதற்கு தேவையான இயந்திரங்கள் வாங்குவது குறித்து திட்டம் தயாரிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. திருப்புவனம் ஜரிகை ஆலையில் 500 மார்க் ஜரிகை உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அதன் உற்பத்தியினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். காஞ்சிபுரத்தில் போலி பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளதாக புகார்கள் வந்துள்ளது. போலி சங்கங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். காஞ்சிபுரத்தில் பட்டு பூங்கா அமைக்கப்பட வேண்டும் என பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் கோரிக்கை வைத்துள்ளனர். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும். ஜரிகை மீதான விற்பனை வரியினை நீக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர். இதன் குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என தெரிவித்தார்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.